**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

**O.S.No.**132/2018

2024 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 27– ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.2 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி திருமதி. A. சீதாலெட்சுமி, M.A.,B.L. மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் கூறப்பட்டு உறுதி கூறப்படுகிறது.

**<u>நாள் : 27.09.2024</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சுதா | ஜாதி | : | |
| த/பெயர் | : | செல்லத்துரை | மதம் | : | |
| கிராமம் | : | | தொழில் | : | சார்பதிவாளர், மன்னார்குடி |
| வட்டம் | : | | வயது | : | |

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் மன்னார்குடி சார்பதிவாளராக கூடுதல் பொறுப்பில் இருந்து வருகிறேன். நான் மன்னார்குடி சார்பதிவாளர் அலுவலகத்தில் உதவியாளராக இருந்து வருகிறேன். கடந்த 2015 ஆம் ஆண்டில் பதிவுத்துறையில் பணிக்கு சேர்ந்தேன். கடந்த 1996–1997 ஆண்டுகளில் நான் பணிக்கு வரவில்லை என்றால் சரிதான். நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்தபோது என்னென்ன ஆவணங்களை எடுத்து வரச்சொன்னார்கள் என்றால் 1997 ஆம் ஆண்டிற்கான ஆவணங்களை எடுத்து வரச்சொன்னார்கள் என்னென்ன ஆவணங்கள் என்று குறிப்பிட்டடு ஞாபகமில்லை. மன்னார்குடி சார்பதிவாளர் அலுவலகத்தில் 1898 வருடத்திலிருந்து பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் உள்ளது.

2. கடந்த 2003 ஆம் ஆண்டு வரை பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் நகல்களும், 2003 லிருந்து கணினி நகல்களாகவும் பராமரிக்கப்பட்டு வருகிறது. புத்தகம் 1, புத்தம் 3 மற்றும் புத்தகம் 4 ஆக பராமரிக்கப்பட்டு வருகிறது. கிரையம் சம்மந்தப்பட்ட ஆவணங்கள் புத்தகம் 1ல் பதிவு செய்யப்படும். ஒரு ஆவணம் பதிவு செய்யப்படும்போது அதனுடன் தாக்கல் செய்யப்பட்ட இதர ஆவணங்களும் கோப்பில் பாதுகாக்கப்பட்டு வருகிறது. கடந்த 1996–1997 ஆண்டுகள் சம்மந்தப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் அலுவலகத்திலுள்ளது.

3. ஒரு ஆவணம் Execusion மற்றும் Registration இரண்டு நிலைகளாக உள்ளது என்றால் சரிதான். Execusion என்பது எழுதிக்கொடுப்பவர் மற்றும் வாங்குபவர் சம்மந்தப்பட்டது என்றால் சரிதான். Execusion முடிவடைந்த பிறகு அதில் சொல்லப்பட்டது போல் எழுதிக்கொடுப்பவர் வாங்குபவர் பண

பரிமாற்றம் குறித்து விசாரித்த பின்பு தான் ஆவணங்கள் பதிவு செய்யப்படும் என்றால் சரிதான். ஒரு ஆவணத்தை பதிவு செய்யும்போது எழுதி வாங்குபவர் அல்லது எழுதிக்கொடுபவர் யார் வேண்டுமென்றாலும் பதிவுக்கு கொடுக்கலாம் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்மந்தப்பட்ட ஆவணத்தை கிரையம் வாங்கிய நபர் தான் பதிவுக்காக முன்னிலைப் படுத்தியுள்ளார் என்றால் சரிதான். அதுக்குறித்து அலுவலக கோப்பில் உள்ளது என்றால் சரிதான்.

4. ஒரு ஆவணம் பதிவு செய்யப்படும் போது எழுதிக்கொடுத்த நபர் ஆஜரானால் அவரிடம் பதிவு செய்யப்படும் ஆவணங்கள் குறித்து விசாரிப்பது வழக்கம் என்றால் சரிதான். இந்த ஆவணம் தொடர்பாக எழுதிக்கொடுத்தவர் முன்னிலையாகாததால் பதிவு செய்ய இயலாது என்று சொல்லி அந்த ஆவணம் திருப்பி கொடுக்கப்பட்டது என்றால் Pending Registration என்று சொல்லி முடிவுறா ஆவணமாக கொடுக்கப்பட்டது. பிறகு அந்த முடிவுறா ஆவணம் மாவட்ட பதிவாளர் உத்தரவின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்டு பதிவுக்கு தாக்கல் செய்த நபரிடம் திருப்பி கொடுக்கப்பட்டு விட்டது என்றால் சரிதான்.

5. அவ்வாறு பதிவு செய்யப்பட்ட ஆவணம் தற்போது வரை பதிவு துறை கோப்பில் பராமரிக்கப்பட்டு வருகிறது என்றால் சரிதான். இந்த ஆவணத்தின் பதிவு தன்மை குறித்து 77(1) பி–க்கு கீழ் எத்தனை நாட்களுக்குள்ளாக ரத்து செய்வதற்கு மனு தாக்கல் செய்யவேண்டும் என்பது குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் குறித்து வாதி தங்கமணி 1996 ஆம் ஆண்டிலிருந்து 2024 வரை எந்த ஒரு ஆட்சேபனையும் மேல்முறையீடும் செய்யவில்லை என்றால் சரிதான்.

6. இந்த ஆவணங்கள் தொடர்பாக பதிவுத்துறை அலுவலர், துணை பதிவுத்துறை அலுவலர், நீதித்துறை, வருவாய்துறை ஆகியவற்றில் வாதியால் மேல்முறையீடு செய்ததாகவோ, அது சம்மந்தமாக சாட்சிக்கு அழைத்ததாக அலுவலக கோப்பில் இல்லை என்றால் சரிதான். நான் சாட்சியமளிப்பது பத்திர பதிவு சட்டத்தின்படியும், அதில் சொல்லப்பட்டுள்ள விதிகளின் படி தான் என்றால் சரிதான். பதிவுத்துறையில் சொல்லப்பட்டுள்ள சட்டவிதிமுறைக்கு உட்பட்டு நான் சாட்சியம் அளிக்கமுடியும் என்றால் சரிதான்.

7. அலுவலக நடைமுறை என்று சொல்லி என்னால் சாட்சியம் அளிக்க முடியாது என்றால் சரிதான். ஒரு அரசு பணியாளர் செய்யக்கூடிய பணிகள் அனைத்தும் சட்டப்படி விதிமுறைகளுக்கு உட்பட்டு

செய்யமுடியும் என்று கருத்தில் கொள்ளமுடியும் என்றால் சரிதான். பத்திர பதிவு அலுவலகத்தில் விதிமுறைகளை மீறி பத்திர பதிவு செய்ததாக எந்த ஒரு விண்ணப்பமும் வாதியால் கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். மாவட்ட பதிவாளர் பிறப்பித்த உத்தரவை மீறி சாட்சியம் அளிக்கமுடியாது என்றாலும், அவரது உத்தரவு தவறானது என்று கூறி சாட்சியம் அளிக்கமுடியாது என்றால் சரிதான்.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

A SEETHALAKSHMI

Digitally signed by A SEETHALAKSHMI
DN: cn=A SEETHALAKSHMI, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2024.09.27 18:36:39 +0530

District Munsif
Mannargudi.